நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.74/2020

அரசு தரப்புக்காக அ.சா.7 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.ப.ஜெகதீஸ்வரன் | தொழில்/ பதவி | மாவட்ட வருவாய் அலுவலர்/இணைப் பதிவாளர், அண்ணாமலை பல்கலைக்கழகம் |
| கணவர்/தந்தை பெயர் | P.பழனிசாமி | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 20 | | | |

1 முதல்3 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of June 2026.

**<u>முதல் விசாரணை</u>**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 11.49)

நான் தற்போது மாவட்ட வருவாய் அலுவலர்/இணைப்பதிவாளர், அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், சிதம்பரத்தில் பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 06.10.2019 ஆம் தேதி வருவாய் கோட்டாட்சியராக கடலூர் கோட்டத்தில் பணிபுரிந்து வந்தேன். 06.10.2019 ஆம் தேதி சரவணன் என்பவர் புகார் மனு அளித்ததன் பேரில் கடலூர்

முதுநகர் காவல் நிலைய குற்ற எண்.462/2019 என்ற முதல் தகவல் அறிக்கை இதச பிரிவு 498(A), 304(B) –ன் கீழ் பதிவு செய்யப்பட்டு முதல் தகவல் அறிக்கை நகல் என்னால் பெறப்பட்டது. இந்த வழக்கில் இறந்துபோன திருமதி. சபீனா என்பவரின் பிரேதம் இருந்த சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் தண்டையார் பேட்டை வருவாய் கோட்டாட்சியரால் பிரேதவிசாரணை மேற்கொள்ளப்பட்டு மரண அறிக்கை கிடைத்த பிறகு இது தொடர்பாக இறந்தவரின் குடும்பத்திடம் கடலூர் கோட்டாட்சியர் அலுவலத்தில் விசாரணை மேற்கொண்டேன். இறந்துபோன சபீனா அம்மா சாந்தி, அப்பா சரவணன், அண்ணன் நிஷாந்த், பெண் வீட்டு பஞ்சாயத்தார் மதன், இறந்துபோன சபீனாவின் கணவர் பாவேந்தன், அவருடைய தகப்பானர் பாவாடைசாமி, தாயார் அஞ்சா, பஞ்சாயத்தார் குமார் ஆகியோர்களை விசாரணை செய்து விசாரணையின் அடிப்படையில் திருமதி.சபீனாவை அடிக்கடி அடித்து துன்புறுத்தியதும் அடிக்கடி வரதட்சணை கேட்டு சித்திரவதை செய்து கொடுமைபடுத்தியதும் தெரிய வந்தது. மேலும் திருமதி.சபீனா இறப்பதற்கு வரதட்சணை கொடுமைக்கான முகாந்திரமும், இறப்பில் சந்தேகமும் இருப்பதால் கணவர் பாவேந்தன், மாமியார் அஞ்சா, மாமனார் பாவாடைசாமி ஆகியோர் மீது மேல் நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்று எனது கருத்தினை பதிவு செய்து என்னுடைய அறிக்கையை கடலூர் காவல் துணை கண்காணிப்பாளருக்கு அனுப்பிவைத்தேன். (அந்த ப.மு.அ.2/4757/2019, நாள்––.12.2019 தேதியிட்ட அறிக்கை 7 தாள்கள் கொண்டது **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது). வடசென்னை, தண்டையார் பேட்டை வருவாய் கோட்டாட்சியர் 07.10.2019 ஆம் தேதியில் இறந்துபோன சபீனா மீது பிரேத

விசாரணை செய்து தாக்கல் செய்த அறிக்கையின் அடிப்படையில் அந்த பிரேதத்தை பெண் தலைமைக்காவலர் 383 புவனேஸ்வரி என்பவர் பெற்றுவந்து அந்த பிரேதத்தை பாவாடைசாமி, அஞ்சா, பாவேந்தன், குமார், மதன், நிஷாந்த், சரவணன், சாந்தி ஆகியோர் கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்து கடலூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் பதிவு செய்த பிரேத விசாரணை அறிக்கை இதுதான். இந்த ஆவணம் வழக்கு நகலுடன் எதிரிகளுக்கு வழங்கப்படவில்லை என்றும் எனவே இந்த ஆவணத்தை குறியீடு செய்வதற்கு தனக்கு ஆட்சபணை இருப்பதாகவும் எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆட்சேபணை தெரிவித்தார். இந்த ஆவணம் வழக்கு விசாரணைக்கா தயார் செய்யப்பட்டு 07.03.2020 அன்று கூடுதல் மகிளா நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு வழக்குக்கோப்பில் காணப்படுவதால் இந்த ஆவணத்தில் நகலை எதிரிகளுக்கு வழங்க தற்போது உத்தரவிடப்படுகிறது. இந்த ஆவணத்தை பற்றி குறுக்குவிசாரணை மேற்கொள்ள எதிரிகளுக்கு வாய்ப்பு உள்ளது. எனவே விசாரணை சமயத்தில் தயார் செய்யப்பட்ட இந்த ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது. (அந்த 7 தாள்கள் கொண்ட பிரேத விசாரணை அறிக்கை **அ.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது). காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் சாட்சிகள் என்று, எங்கு விசாரணை செய்தேன் என்று கேட்டால் கடலூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் 25.11.2019 தேதியில் விசாரித்தேன். சாட்சிகளையும், பஞ்சாயத்தார்களையும் விசாரிப்பதற்கு முன்னர் சம்மன் அனுப்பப்பட்டதா என்றால் அனுப்பப்பட்டது. சம்மன் நகல் அறிக்கையுடன் அனுப்பப்படவில்லை

என்றால் சரிதான். புகாரும், முதல் தகவல் அறிக்கையும் 06.10.2019ஆம் தேதியில் என்னால் பெறப்பட்டதால் என்றால் நான் கடலூர் வருவாய் கோட்டாட்சியராக 12.10.2019 ஆம் தேதியில் பணியில் சேர்ந்தேன். பணியில் சேர்ந்த பிறகு அந்த கோப்பு என்னிடம் கொடுக்கப்பட்டது. என்னுடைய விசாரணைக்கு முன்னரே இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையில் இதச பிரிவு 498(A) மற்றும் 304(B) என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வரதட்சணை மரணம் சம்மந்தமான வழக்குகளில் கு.வி.மு.ச 174(3) பிரிவின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வருவாய் கோட்டாட்சியரும் காவல் துணை கண்காணிப்பாளரும் இணையான விசாரணை மேற்கொள்ளவேண்டும் என்றால் சரிதான். என்னிடம் கடலூர் முதுநகர் காவல் ஆய்வாளர் இந்த வழக்கு சம்மந்மாக கொடுத்த வேண்டுகோள் கடிதத்தில் சட்டப்பிரிவு 174(3) Cr.P.C–ன் படி பிரேத விசாரணை அறிக்கை கொடுக்கும்படி கேட்டக்கப்பட்டது. 06.10.2019ஆம் தேதியில் இந்த வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டது. நான் சென்னை ஸ்டான்லி மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றும் வழக்கில் இறந்துபோன சபீனாவின் பிரேதத்தினை பிரேத விசாரணை எதுவும் செய்யவில்லை என்றும் சொன்னால் சரிதான். வடசென்னை, தண்டையார்பேட்டை வருவாய் கோட்டாட்சியரால் பிரேத விசாரணை செய்யப்பட்டு மரண அறிக்கை பெறப்பட்டுள்ளது என்றால் அ.த.சா.ஆ.7–ல் குறிப்பிடப்பட்டது என்றால் சரிதான். அந்த தண்டையார்பேட்டை வருவாய் கோட்டாட்சியரின் அறிக்கை என்னுடைய அறிக்கையுடன் இணைத்து அனுப்பப்படவில்லை என்றால் சரிதான். அலுவலக கோப்பில் உள்ளது என்று நான் கூறுகிறேன். நான் 12.10.2019 ஆம் தேதி அன்று பணியில் சேர்ந்ததால் கடலூரில் இறந்துபோன சபீனாவின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை நான் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் விசாரணை செய்த சாட்சிகளிடம் வழக்கிற்கான புகார் யாரால் எழுதப்பட்டு யாரிடம் கொடுக்கப்பட்டது என்று விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. திருமணத்தின்போது சீர் வரிசை செய்தது குறித்த எழுத்து மூலமான ஒப்பந்தத்தை என்னிடம் கொடுத்தார்களா என்றால் இல்லை. சாட்களிடம் விசாரித்தபோது இறந்துபோன சபீனாவிற்கும் அமரன் என்பவருக்கும்

ஏற்கனவே பழக்கமாகி அதை அவர் பெற்றோர்கள் கைவிட சொல்லி 1–ம் எதிரிக்கு இறந்துபோன சபீனாவை வலுக்கட்டாமாக திருமணம் செய்து கொடுத்ததால் சபீனாவிற்கு மன வருத்தம் இருந்தது என்று என்னுடைய விசாரணையில் தெரியவந்ததா என்றால் இல்லை. 1–ம் எதிரி பாவேந்தன் சபீனா மீது விவாகரத்து கேட்டு கடலூர் குடும்ப நல நீதிமன்றத்தில் IA.No.282/2019 in HMOP –/2019 என்ற வழக்கில் நிலுவையில் இருப்பது சாட்சிகள் என்னிடம் தெரிவித்தார்களா என்றால் தெரிவித்தார்கள். என்னுடைய விசாரணையில் சாட்சி பெரியகுப்பத்தை சேர்ந்த ஆறுமுகம் மகன் குமார் என்பவர் "*எனவே சகோதரி சபினாவின் இறப்பிற்கு காரணம் அவரது முன்கோபமே எனவே சபீனாவின் இறப்பிற்கும் அவரது குடும்பத்தினருக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்*". என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். எதிரிகள் யாரும் என் விசாரணையில் சபீனாவின் பெற்றோர்களிடம் வரதட்சணையாக சீர் கேட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய விசாரணையில் எதிரிகள் அனைவரும் பெரியக்குப்பத்தை சேர்ந்தவர்கள் என்றும் சபீனாவின் பெற்றோர்கள் கடலூர் முதுநகரில் வசித்து வருவதாக தெரியவந்தது என்றால் சரிதான். இறந்துபோன சபீனா இறப்பதற்கு 6 மாதத்திற்கு முன்பிருந்து அவருடைய பெற்றோருடன் வசித்து வந்தார் என்று தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். தனி நபர் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. மதன் மற்றும் குமார் என்பவர்களை விசாரித்துள்ளேன். சாட்சிகளை வாக்குமூலமாக பதிவு செய்யும்போது தட்டச்சு செய்தது யார் என்று குறிப்பிடவில்லை என்றால் அவ்வாறு குறிப்பிடும் வழக்கம் இல்லை. வாக்குமூலங்களில் நான் கையொப்பம் செய்துள்ளேன். நான் இந்த வழக்கில் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் முறையாக விசாரணை செய்திருந்தால் சபீனா வேறொரு நபரை திருமணம் செய்து கொள்ள இருந்தபோது பெற்றோரால் 1–ம் எதிரியுடன் வலுக்கட்டாயமாக திருமணம் செய்து வைத்தது பிடிக்காமல் சபீனா தற்கொலை செய்து கொண்டதை தெரிந்துகொண்டிருக்க வாய்ப்பு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய விசாரணையில் இறந்துபோன சபீனா தன்னுடைய பெற்றோர்கள் வீட்டில் இருந்தபோது எலி பேஸ்ட் சாப்பிட்டு தற்கொலை செய்துகொண்டார் என்பதை தெரிந்துகொண்டேன்

என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் பிரேத விசாரணையை செய்யவில்லை என்றால் நான் பிரேத விசாரணை செய்யவில்லை. வேறு வருவாய் கோட்டாட்சியர் பிரேத விசாரணை செய்ததை குறிப்பிட்டு அறிக்கை கொடுப்பது வழக்கம் என்பதால் அவ்வாறு அறிக்கை கொடுத்துள்ளேன். நான் இந்த வழக்கை சட்டப்படி முறையாக விசாரிக்காமல் போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஏற்கனவே முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்ட சட்டபிரிவுகளுக்கு உட்பட்டு போலிசாருக்கு சாதகமாக அறிக்கை கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன சபீனாவை எதிரிகள் யாரும் வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தவில்லை என்றும் சபீனாவின் இறப்பிற்கு எதிரிகள் யாரும் காரணம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. வாழ பிடிக்காமல் சபீனா தற்கொலை செய்து கொண்டார் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 12.47)

2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 17 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.